# சொக்கப்பனை - மண்ணின் மீள் கனவுகளும் குல தெய்வங்களின் மீளுயிர்ப்புகளும்

By

**பெனடி, கெ.**

*இணைப் பேராசிரியர், அரசு கலைக் கல்லூரி, தைக்காடு, திருவனந்தபுரம், கேரளா, இந்தியா.*

**ஆய்வுச்சுருக்கம்**

*''கவிதை என்பது கருத்தல்ல. அது குருதி வழியும் காயத்திலிருந்தோ, புன்னகை புரியும் உதடுகளிலிருந்தோ உதயமாகிறது'' – கலீல் ஜிப்ரான்.*

*கலீல் ஜிப்ரானின் கவிதை குறித்த இக்கருத்து கடங்கநேரியான் கவிதைளுக்கு முழுமையாகப் பொருந்துகிறது எனலாம். தமிழ்க் கவிஞர்களில் மிகவும் முக்கியமானவர். கல்விப்புலத்திற்கு வெளியே ஒரு மருத்துவ விற்பனைப் பிரதிநிதியாக இருந்து கொண்டே கவிதை வாயிலாகத் தனது உணர்வுகளை வெளிப்படுத்துகிறார். இக்கவிதை தொகுப்பில் இடம்பெற்றுள்ள கவிதைகள் சமகால அரசியலை, மக்கள் வாழ்வியலை மையமாக வைத்து எழுதப்பட்டுள்ளன. அந்த வகையில் இத்தொகுப்பு சிறந்த இடத்தைப் பெறுகிறது. 2016-ல் வெளி வந்த இந்தத் தொகுப்பு மத பாசிசத்தையும், பண்பாட்டுப் பாசிசத்தையும் கேள்விக்குள்ளாக்குகிறது.*

***கலைச்சொற்கள்:*** *சொக்கப்பனை, கனவு, மண், குல தெய்வங்கள்*

## முன்னுரை

கவிதை மனம் என்பது களங்கமற்றது. கபடமற்றது. காலத்தின் மனசாட்சியாய் நிற்பது. இயலாமைகளையும் இயலாமைகளின் வலி களையும், போராட்ட உணர்வுகளையும் அது சார்ந்து ஏற்படும் வன்முறைகளையும், கனவு களையும் நினைவுகளையும், நிராசை களையும் ஆசைகளையும் என ஒட்டு மொத்த தன்கால சமூகத்தின் இருப்பாக இருப்பது கவிதை. மொத்தத்தில் சொல்லப் போனால் கவிதை மனம் என்பது ஒரு குழந்தையைப் போன்றது. ஆனால், கவிதை நிச்சயமாகக் குழந்தையைப் போன்றதல்ல.

கடங்க நேரியானின் கவிதைகளும் அப்படித் தான் ஒரு குழந்தையைப் போன்றது. தாயை நினைத்தழும் குழந்தையைப் போன்று தன் சமூகத்தை நினைத்து அழுகின்றது. ஏங்குகின்றது. கோபத்தைக் காட்டுகின்றது. தன் ஆசைகளை வெளிப்படுத்துகின்றது.

## பழம் நினைவுகள்

ஒவ்வொரு கவிதை வரிகளும் பழம் மரபின் நினைவுகளை, மண்ணின் நிறங்களை, குணங்களை, வாழ்வுகளை, செல்லையா தாத்தாவாகவும், பிரணவ் குட்டியாகவும், பூனையாகவும், அதன் மியாவ்மியாவ் ஓசையாகவும், நெருஞ்சில் முள்ளாகவும், சப்பாத்திக் கள்ளிகளாகவும் அடையாளப் படுத்திக் கொண்டே இருக்கின்றது. இதுதான் இந்தத் தொகுப்பின் வெற்றியும் கூட. பண்பாட்டை, மரபுகளை, வரலாற்றை, தன் மண் சார்ந்த வாழ்வியலை, அரச வன்முறையை என அனைத்தையும் எள்ளல்தன்மையுடன் உரக்கப் பேசும் கவிதைகள் - கவிஞரைச் சமகால கலகக் கவிஞராகவே அடையாளப்படுத்து கின்றது.

சமகால வாழ்வு என்பது ஒரு போராட்டமாக மாறிவிட்ட சூழலை, அதில் வெற்றியோ, தோல்வியோ விடாமல் போராடித்தான் ஆக வேண்டும் என்பதைக் கவிஞரே தனது

முன்னுரையில் “கடந்து செல்ல வேண்டிய தூரம் நீண்டு கிடக்கிறது. கருவேல மரங்கள் சூழ்ந்த இடத்தில் வேம்பின் நிழல் கிடைத்தற் கரிய பொக்கிசம். – அந்நிழலில் இளைப்பாறும் கணம்தான் கவித்தருணம். கொழுத்த முயலைத் துரத்தி தவற விட்ட வேட்டை நாயின் நாவிலிருந்து வழிந்தோடும் உமிழ் நீர் தோல்வியைப் பறை சாற்றும். ஆனாலும், கைவசமிருக்கும் இறைச்சித் துண்டுகளைக் கொடுத்து வேட்டை நாயை உற்சாகப் படுத்தியாக வேண்டும். என் கைவமிருக்கும் கவிதைகள் தான் இறைச்சித் துண்டங்கள். அதற்காகக் காத்திருக்கும் வேட்டை நாயும் நானே” என்று கூறும் கூற்றிலிருந்து உணர்ந்து கொள்ளலாம்.

**சங்கக் கவிதையின் தொடர்ச்சி**

சங்கக் கவிகளுக்கிருந்த மக்கள் மீதான, இந்த மண்ணின் மீதான அக்கறை இன்றைய கவிகளிடம் இல்லாமல் போயிற்றே என்னும் ஆதங்கம் குடபுலவியாரின்

> “நீர் இன்று அமையா யாக்கைக்கு
> எல்லாம், உண்டி கொடுத்தோர் உயிர்
> கொடுத்தோரே” (ப.6)

என்னும் பாடல் வரிகளை எடுத்துக் காட்டியிருப் பதன் வாயிலாகவும்,

பாரதியின் வரிசையில் நானும் பித்தம் தெளிந்த சித்தக் கவிஞன் என்பதை “சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாதல் கண்டு, சிந்தை இரங்காரடி கிளியே செம்மை மறந்தாரடி கிளியே” (ப.7) என்னும் பாரதி வரிகளை உதாரணமாகக் காட்டியிருப்பதன் வாயிலாகவும் உணரலாம். முன்னுரையே கவிஞரை யாரென வாசகனுக்கு அடையாளப்படுத்தி விடுகிறது. இது கவிதை பற்றிய புரிதலுக்கும் கவிஞன் பற்றிய புரிதலுக்கும் வழிகோலுகிறது.

> “என் முற்றத்து
> தானியங்களை உனக்கென எடுத்து வந்த
> பறவையைத்தான் எனக்கென சமைத்து
> வைத்திருக்கிறாய்” (ப.10)

என்னும் வரிகளில் வெளிப்படும் கவிஞனின் வலி என்பது வாசகனால் தாங்கிக் கொள்ள இயலாததாக மாறும்போதும் இன்றைய சமூகம் நன்மைகளையே அழிக்கிற செயல்களை எந்தவித தயக்கமும் இன்றி செய்து வருவதை உணராமல் போவது என்பது இயலாமல் போய்விடுகிறது.

> “தசைகளைப் புசிக்கும் பசியில்லை சொல்லித்
> தீராத தாகமெனது
> அள்ளிப் பருகுகிறேன்” (ப.10)

என்று உருகுகிறபோதும், கவிஞர் எதன் பிரதிபலிப்பாக இந்த வரிகளைப் பயன்படுத்தி யுள்ளார் என்ற கேள்விகளையும் அது சார்ந்த தற்கால சமூக நிகழ்வுகளையும், பெண் சார்ந்த புரிதல் என்பது தசை சார்ந்ததாகவே இருக்கிறது என்பதையும் மனதில் அறைந்து சொல்கிறது.

> “பனைக் கள்ளருந்துவோம்” (ப.10)
> “அம்மிக் கல்லில் நசித்தெடுத்த பக்குவம்” (ப.10)

என்னும் ஒரு வரிகள் ஒரு இனத்தின் வாழ்வியலை, தீங்கற்ற கொண்டாட்டத்தை, உறவையே வெளிப்படுத்துகின்றது.

“கடந்த பிறந்த நாளுக்குப் பரிசளித்த, புத்தனின் சிலையை எங்கேயென வினவுகிறாள், சிலிண்டருக்கு வக்கில்லாமல் விறகடுப்பிற்குப் பரிசளித்தேன்”(ப.11) என்னும் வரிகள் இன்றைய

இந்திய மக்களின் ஏழ்மையை நவீனத்தோடும், பழைமையோடும் இணைத்துப் பேசுகிறது. புனிதர்கள் என்று கொண்டாடப்படுகிற அனைவரும் எல்லா ஆசைகளும் உறுப்புகளும் உடைய மனிதர்கள்தான் என்பதை

> "பிக்குகளின் உறுப்புகளும்,
> தசையாலானவைதான்" (ப.11)

என்னும் வரிகள் உணர்த்தும் போது, இன்றைய உலகம் அதை உணர்ந்து கொள்ளாமல் இன்னும் அவர்கள் பின்னால் அலைந்து கொண்டிருக்கிறதே என்னும் எண்ணம் தான் ஏற்படுகிறது.

### விருதுகள் என்னும் கேலிக் கூத்துகள்

இன்றைய விருதுகள் என்பது எத்தகையதாக உள்ளது, அது எழுத்தாளனின் கையில் எப்படிப்பட்டதாக மாறுகிறது என்பதை "எழுத்தாணியைப் பற்றிய கைகளுக்கு, உடும்பு விரல்கள், விருதுகளைப் பற்றும் போது, சேறளையும் விரல்களுக்கு மம்பட்டி ஆயுதம், எழுதுகொல் மயிராப் போச்சு"(ப.13) என்னும் வரிகளில் விளக்குகிறார். அத்தோடு எழுதுகோல் என்பது வெறும் மயிரின் இடத்தைத்தான் பிடிக்கிறது என்னும் தனது ஆதங்கத்தையும் வெளிப்படுத்துகிறது.

"நூலறுத்தெழுந்த பட்டமொன்று, வாமனின் வழி மறிக்கும், அகோரிகளுக்கு கங்கையில் இடமுண்டு, ஹிந்தியத்தில் இடமில்லை." (ப.14) "மனிதக் குருதியருந்திய மகாத்மாக்கள் அரசாளும் போது நவ துவாரங்களையும் மூடிக் கொள்ளலாம்" (ப.14) – எனக் கவிஞர் எள்ளல் தொனியுடன் கவிதையை முடித்திருப்பது இந்துத்துவ சர்வாதிகாரத்தையும், அது பெல்லெட் குண்டுகளாகக் கட்டவிழ்த்து விடும் வன்முறைகளையும் வலரும் காலம் என்பது வாமனன் செய்த சூழ்ச்சியைப் போல், அவனது சூழ்ச்சிக்கெதிராக வளர்ந்து வரும் மகாபலி போல் இவ்வரிகளும் வளரும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. கவிஞரின் தற்காலப் புரிதலும் அதற்கெதிரான போராட்டக் கருத்தியலை இந்துத்வ புரட்டுப் புராணங்களைக் கொண்டே கட்டுடைப்பது என்பதும் கவிஞரது கலகக் குரலின் வெளிப்பாடாகும்.

"மேகாற்றில் தலைவரி கோலமாக, ஆடும் தென்னம்பிள்ளை, யட்சியை நினைவூட்டும்" (ப.17) "பூடம் தெரியாமல் சாமி கொண்டாடியவன் அடுத்த கொடைக்கு உயிர் பிழைத் திருப்பது அதிசயம்" (ப.23) "அணங்கை காமுறும் தொன்ம விலங்கின் குறி"(ப.23), "மயான வேட்டைக்குக் கிளம்புகிறார், சுடலைமாடன்", "எருக்கிலைகளைத் தென்னங் குச்சிகளால், தைத்துப் படையலிடுபவன் அறிவான், நடுகற்களின் வீரியத்தை"(ப.27), "காச்சியும் பூச்சியும் காவலிருக்கத் தலை சாய்ந்திருக்கிறது முத்துப்பட்டனுக்கு"(ப.28), "செல்லையாத் தாத்தாவின் சமாதியைத் தகர்த் தெறிகிறான்" (ப.28), "ஆதி முனி அடவுக்குள் துயில்கிறது" (ப.30), "கருப்பசாமியின் வீச்சரிவாளில் கெண்டைகளின் பிரதிபலிப்பை வாங்கி வளரும் நிலவு", (ப.30), "நடுகற்களைச் சுற்றிப் பிணைந்து மேலெழும் பிரண்டைச் செடிகள் யாருக்கானவை, அவை காரணமின்றி முத்தி எத்தனை நாட்களாயிற்று" (ப.35), "புத்தூர் கட்டோடு கோட்டுக்கு வெளியேயிருந்து உற்சாகப்படுத்த மற்றொருவன் பாடிச் செல்கிறான் கபடி கபடி கபடி" (ப.35), "சம்பந்தரின் தயவில் குருதி பருகிய சமணப் பள்ளியின் காலடிக் குளம் சலனமற்றிருக்கிறது" (ப.40) "உள்ளாடையை உலர்த்தும் போது சமணத் துறவியின் ஆடை அணிகிறான்"(ப.40), "மலமள்ளும் கைகளுக்கு விடுதலையில்லை,

ஆனாலும் ஸ்மாட் போன்களில் டிஜிட்டல் இந்தியா முழக்கங்கள்”(ப.41), “மயில் வாகன மேற வேண்டாம் முருகா ஹிந்தியப் பிரதமராகும் வேழ முகத்தானிடம் பறிகொடுத்த கனியைப் பறித்திடலாம் முழு நிலவுக்குள்” (ப.41), “சிற்பங்களுக்கு உறுப்புண்டு உயிரில்லை” (ப.42), “ஓடும் ரயிலின் சக்கரங்களின் தாள லயத்திற்குப் பிடித்த பெயரைப் பொருத்திப் பார்க்கும் இசக்கி அறிந்ததில்லை கர்னாடக சங்கீதத்தை” (ப.49), “ஆதித் தாயின் இருப்பிடமறிந்த மகிழ்வில் சேவலின் தலை திருகுகிறான் குடியானவன்” (ப.30) – பாரதியில் இந்துத்துவத்தை மறு கட்டமைக்க முயலும் கலகக்குரல், இங்கே இந்துத்துவத்தை உடைத்துத் தூள் தூளாக்கி மண் சார்ந்த மரபுகளை, அடையாளங்களை, மண் சார்ந்த நம்பிக்கையை, வாழ்வியலை, தனி மனித சுதந்திரத்தை முன்னிறுத்தும் புரட்சிக் குரலாகப் பெருங்குரலெடுத்து கூவிச் செல்கிறது.

### இந்துத்வத்திற்கான எதிர்க் குரல்

இந்துத்வம் கட்டமைக்க முயலும் பார்ப்பனியத்தைக் கேள்வி கேட்பதோடு, அது நிலைக்காது ஒரு திங்களுக்குள் அது மாறும் என தொன்மக் கதையாடலை (முருகன் - விநாயகன்) முன்னிறுத்தி கவிஞர் பேசுவது நம்பிக்கை சார்ந்த வி'யம் மட்டுமல்லாது வரலாற்றுப் புரிதலுள்ள செய்தியாகவும் படுகிறது. சிலை வணக்கம், சுயமில்லாமல் வாழும் மனிதர்களைப் பற்றிய எச்சரிக்கை, சமணத் துறவியின் உள்ளாடை என அனைத்தும் இந்துத்வ மரபை வலுவாக எதிர்க்கின்றன.

“டிபார்ட்மென்டல் ஸ்டோரின் பிராண்டட் பாக் கெட்டுகளில், மளிகைக் கடைக்காரர்களின் மூச்சு திணறுகிறது” (ப.19), “தலித்தியம் பெரியாரியம் எல்லாம் கவனமீர்க்கும் பொருளாதாரப் பண்டம், பனம்பாலுக்கு ஈடாவதில்லை சீமை சாராயம்” (ப.20), “வந்தேறிக்குக் கவிதையெழுதி பேழுக்களின் காசில் மதுவருந்தி பூர்வகுடி களுக்கான செலவில் கணக்கெழுதுகிறார்கள், தேவைக்கு அதிகமாகப் பெருத்துத் தொங்குகிறது தசை” (ப.21), “நிலம் கீறி செல்லையாத் தாத்தாவின் புதை குழியிலிருந்து விதையொன்று தளிர்க்கக் கண்டேன்” (ப.26) “முருங்கை இலைகளி லிருந்து உதிரும் துளிகளைக் கைகளிலேந்தும் பிரணவ் குட்டியின் பிஞ்சுக் கரங்களில் துளித்துளியாய் வானம்” (ப.33), “மணல்கள் எங்கும் மலர்ந்திருக்கின்ற கண்கள்” (ப.39), “அந்தரங்கங்கள் யாவும் இரசியமாய்ப் பதியப்படுகின்றன அறுத்துக் கொண்டவர்கள் ஒருநாள் பகிரலாம்” (ப.39), “முதலாளிகள் சுகவாசிகள் கடவுளர்களைப் போல” (ப.41), “விரல்களை அலங்கரிக்கும் நகப்பூச்சு தேவை யாயிருக்கிறத ஆப்பிள் விற்பதற்கு” (ப.51), “அந்தி மந்தாரையும் பவளமல்லியும் பாடப் புத்தகத்தில் மட்டும் மலர்கின்றன” (ப.52) என்பன போன்ற வரிகளும் நடைமுறைச் சமூகத்தை அதன் இருப்பை கேலி செய்வதோடு தனது வேதனையையும் பதிவு செய்கிறது.

சில கவிதை வரிகள் வெறும் உரைநடையாகவும், ஹைகூ வடிவமாகவும், அழகியல் தன்மையற்றதாகவும் காணப்பட்டாலும் சொக்கப்பனை கவிதைத் தொகுப்பானது

> “சொக்கப்பனை கொளுத்த
> எரியும் எரிக்கும்
> பின்னும்
> வேலிப் படலேறிப் பூக்கும்
> செங்காந்தள்” (ப.60) – பூ போன்று

எல்லார் மனதிலும் ஏறிப் படரத்தான் செய்யும்.

**முடிவுரை**

கவிதையின் இயல்பும் வீரியமும் குறையாமல் அமைந்துள்ள இத்தொகுப்பு தமிழ்க் கவிதை வரலாற்றில் மிகவும் முக்கியமானது. கடங்கநேரியான் இக்கவிதை தொகுதியின் வாயிலாகச் சமகால இந்தியாவை, இந்தியாவின் தத்துவப் போக்கை, அரசியல் திசையை, பண்பாட்டு விளைவுகளை, அரசியலைப் பேசியுள்ளார்.

## பார்வை நூல்கள்


கடங்கநேரியான், சொக்கப்பனை, முதல் பதிப்பு, வலசை பதிப்பகம், ஆர். எம். காலனி, திண்டுக்கல், தமிழ் நாடு, இந்தியா, 2016.

கலீல் ஜிப்ரான், தீர்க்கதரிசி (தி ப்ராபெட்), பனுவல் பதிப்பகம், திருவான்மியூர், சென்னை, இந்தியா, 2019.


## To cite this article

*****************


Benady, K. (2024). சொக்கப்பனை-மண்ணின் மீள் கனவுகளும் குல தெய்வங்களின் மீளுயிர்ப்புகளும். *Sparkling International Journal of Multidisciplinary Research Studies, 8*(1), 22-26.


*********************************************************************************************

## ABOUT THE AUTHOR




***Dr Benady, K****. is currently working as an Associate Professor and Head of the Department of Tamil in Govenment Arts College, Thycaud, Trivandrum, Kerala, India. He got his Ph.D. from University of Kerala, Trivandrum on the topic 'Child characters in post independence Tamil short stories'. He published 10 articles in various journals eight articles were published in UGC Referred journals. He participated in one Orientation and 3 Refresher courses at HRDC, Karyavattom. Kerala. He secured one award for best faculty in Tamil Language, from Coimbatore, Tamilnadu, India.*


*********************************************************************************************